<u>கூடுதல்  மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்</u>

**அசல் வழக்கு எண். 24/2025**

**வா.சா.1 –  ஜெயலட்சுமி**

<u>16-09-2025  சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு  1ம் பிரதிவாதி தரப்பில்  குறுக்கு விசாரணை</u>

1. எனக்கு திருமணம் நடக்கும் போது ஆறுமுகத்தின் வயது என்ன என்றால் 41 வயது. ஆறுமுகத்திற்கு 41 வயது என்பதால் ஆறுமுகத்திற்கு ஏற்கனவே திருமணம் ஆனாதா என்று கேட்டு தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்துகொள்ளவில்லை. ஆறுமுகத்தின் தாயார் திருப்பூரில் 43, குமாரசாமி காலனி 3 வது வீதியில் உள்ளார். திருமணத்திற்கு முன்பு அவரது தாயாரைப்பார்த்து பேசியதில்லை. எனது திருமணத்திற்கு அவரது தாயார் வந்தாரா என்றால் வந்தார். ஆறுமுகத்தின் தாயார் திருமணத்திற்கு வந்ததற்கு புகைப்படத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள கோவில் ரசீது யார் பெயரில் உள்ளது என்றால் எனது அண்ணா புக் பன்னியதால் அவர் பெயரில் உள்ளது.

2. கோவிலில் ரசீது வழங்கினால் மனமகன், மனமகள் பெயர் குறிப்பிட்டு தான் வழங்குவார் என்றால் எனது அண்ணன் தான் புக் செய்தார். கோவில் ரசீதில் எனது பெயரோ ஆறுமுகத்தின் பெயரோ இல்லை என்றால் சரிதான். மேற்படி ரசீது யாருடைய திருமணத்திற்காக வழங்கப்பட்டது என்பது சொல்லமுடியாது என்றால் சரியல்ல, எனது திருமணத்திற்காக வழங்கப்பட்டது. 2004 ல் திருமணமானதாக சொல்லும் நான் அதனை பதிவு செய்தேனா என்றால் இல்லை. ஆறுமுகம் எனது கணவர் என்று சொல்வதற்கு சட்டப்படியான ஆவணம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. திருமண அழைப்பிதழ் வழக்கிற்காக தயாரிக்கப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல.

3. திருமணத்திற்கு பின்னிட்டு நானும் ஆறுமுகம் தனியாக வாழ்ந்தோமா என்றால் மாமியாருடன் சேர்ந்து வாழ்ந்தோம். எனது மாமியார் வீட்டு முகவரியை நான் பயன்படுத்துவதால் அவ்வாறு சாட்சியம் அளிக்கிறேன் என்றும், நான் எனது மாமியாருடன் வாழவில்லை என்றால் சரியல்ல. எனது மாமியாரை இன்று வரை நான் தான் பார்கிரேன். அவர் என்னுடன் தான் உள்ளார். எனது நான்கு நாத்தனாருக்கும் நான்தாக் சீர் செய்து திருமணம் நடத்திவைத்தேன். ஆறுமுகத்தின் குடும்ப அட்டை எந்த ஆண்டு வழங்கப்பட்டது என்றால் 2005 ல் வழங்கப்பட்டது. 2005 க்கு முன்பு ஆறுமுகத்திற்கு குடும்ப அட்டை இல்லையா என்றால் புஸ்வாவின் குடும்ப அட்டையில் அவர் பெயர் இருந்தது.

4. புஷ்பாவின் குடும்ப அட்டை எந்த ஆண்டு வழங்கப்பட்டது என்று எனக்கு தெரியாது. புஷ்பாவின் குடும்ப அட்டை விபரம் எனக்கு திருமணமாகி 5 வருடம் கழித்து தெரியவந்தது. அது சம்பந்தமாக புஷ்பா மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. வேறு பெண்களுடன் ஆறுமுகத்திற்கு தொடர்புள்ளதாக கூறும் நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. எனக்கு திருமணமானபோது ஆறுமுகம் Photo Studio வைத்திருந்தார். திருமணத்திற்கு முன்பு 10 ஆண்டுகளாக அவர் அதை நடத்திவந்ததாக சொன்னார். Photo Studio விற்கு லைசன்ஸ் உள்ளதா என்று தெரியாது. லைசன்ஸை எந்த முகவரி கொடுத்து வாங்கினார் என்று எனக்கு தெரியாது.

5. Studio வை முதலில் உசா தேட்டர் அருகிள் வைத்திருந்தார், அதன் பிறகு CTC பஸ் டிப்போ அருகே வைத்திருந்தார். எனது கணவருக்கு உடல் நிலை சரியில்லை என்று திருப்பூர் அரசு மருத்துவமனையில் நான் சேர்க்கவில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி தான் சேர்த்தார் என்றால் சரிதான். ஆறுமுகம் இறந்த பிறகு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். காவல் நிலையத்தில் 1ம் பிரதிவாதிதான் அவரது முதல்

மனைவி என்று கூறினார்கள் என்றால் சரியல்ல. எந்த தொந்தரவும் செய்யக்கூடாது என்று காவல் துறை அறிவுறித்தியதால் நான் அமைதியாக இருந்துவிட்டேன் என்றால் சரியல்ல. எனது கணவரை எங்கு அடக்கம் செய்தார்கள் என்றால் திரும்பூர் மின்மையானம்.

6. அந்த படிவத்தில் நான் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். அதற்கு பிறகு ஆறுமுகத்திற்கு இறப்பு சான்று வழங்கப்பட்டது என்றால் சரிதான். ஆறுமுகத்தின் இறப்பு சான்றிதழில் 1ம் பிரதிவாதியின் பெயரைதான் மனைவி என்று குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் சரிதான். அந்த விபரம் எனக்கு அப்போதே தெரியும் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியின் பெயர் தவறாக குறிப்பிட்டுள்ளதாக திருப்பூர் மாநாகராட்சியில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. ஆனால் VAO அலுவலகத்தில் ஆட்சேபணை செய்தேன். அதற்கான ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை. அதன் பிறகு நான் வாரிசு சான்றிதழை வாங்கினேன் என்றால் சரிதான். இன்று வரை 1ம் பிரதிவாதியின் பெயர் தான் ஆறுமுகத்தின் இறப்பு சான்றிதழில் உள்ளது என்றால் சரிதான்.

7. ஆறுமுகத்தின் இறப்புச்சான்றிதழில் உள்ள 1ம் பிரதிவாதியின் பெயரை திருத்தம் செய்யாமல் வாரிசு சான்றிதழ் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். அதில் 1ம் பிரதிவாதியின் பெயரோ அல்லது அவரது குழந்தையின் பெயரோ இல்லை என்றால் சரிதான். வருவாய் துறையில் நான்தான் மனைவி என்று பொய்யாக சொல்லி வாரிசு சான்றிதழ் பெற்றுள்ளேன் என்றால் வழக்கறிஞர் வாங்கிக்கொடுத்தார். வாரிசு சான்றிதழ் சம்பந்தமாக VAO எப்போது விசாரித்தார் என்றால் தேதி ஞாபகம் இல்லை 1 வருடம் ஆகிறது. வருவாய் அலுவலர் விசாரிக்கவில்லை. வட்டாச்சியர் விசாரிக்கவில்லை. எனக்கு திருமணம் நடந்து 1 வருடம் கழித்து 1ம் பிரதிவாதி பற்றி எனக்கு தெரியவந்தது.

8. வாரிசு சான்றிதழில் 1ம் பிரதிவாதியின் பெயரை மற்றும் அவரது மகள் பெயரை மறைத்து வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. ஆறுமுகத்திற்கு பல பெண்களுடன் தொடர்பு இருந்ததால் பல நபர்களை திருமணம் செய்துள்ளார். தேவி என்பவரை திருமணம் செய்வதற்கு முன்பே புஷ்பா என்பவரை திருமணம் செய்துள்ளார். புஷ்பாவை எப்போது திருமணம் செய்தார் என்று வழக்கில் சொல்லியுள்ளேனா என்றால் வருடம் தெரியாது. அது சம்பந்தமாக நான் ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதிக்கு புஷ்பா என்ற நபரை தெரியாது என்றும், பொய்யாக அவரை வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல.

9. நான் சொல்வதுபோல் புஷ்பா சம்பந்தமாக எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. புஷ்பாவை பொய்யாக வழக்கிற்காக உருவாக்கியுள்ளேன் என்றால் சரியல்ல. ஆறுமுகத்திற்கு 43, குமாரசாமி நகர் விலாசத்தில் முதல் முதலாக குடும்ப அட்டை வழங்கப்பட்டது. நான் சொல்வது போல் அவ்வாறு வழங்கப்படவில்லை என்றும், திருப்பூர் கருவம்பாளையம், முத்துசாமி கவுண்டர் வீதி முகவரிக்கு தான் முதல் முதலாக குடும்ப அட்டை வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. 43, குமாரசாமி காலனி ஆறுமுகத்தின் தகப்பனார் பெயரில் உள்ள சொந்த வீடு என்றால் சரிதான். திருமணத்திற்கு முன்பு வாக்காளர் அடையாள அட்டை மட்டும் தான் வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. ஆதார் அட்டையும் அதே முகவரியில் தான் உள்ளது.

10. 1997ம் ஆண்டே 1ம் பிரதிவாதி தேவியை ஆறுமுகம் திருமணம் செய்துகொண்டார் என்றால் 1ம் பிரதிவாதியின் மகளின் பிறப்புச்சான்றிதழில் தகப்பனார் பெயர் ஆறுமுகம் என்று இல்லை செந்தில் என்று தான் உள்ளது. ஆறுமுகத்திற்கு தேவிற்கும் ஏற்பட்ட குடும்ப வாழ்க்கையின் பயனாகதான் 1998ம் ஆண்டு லாவண்யா என்ற பெண் குழந்தை பிறந்தார் என்றால் 11

ஆண்டுகள் கழித்து ஆறுமுகம் பெயரை போட்டு லாவண்யாவின் பிறப்புச்சான்றிதழ் வாங்கப்பட்டுள்ளது. லாவண்யாவின் பிறப்புச்சான்றிதழ் இரு முறை பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி விபரத்தை வழக்குரையில் சொல்லவில்லை. அது குறித்து மாநகராட்சியில் ஆட்சேபணை செய்தேனா என்றால் விபரம் தெரியாததால் செய்யவில்லை. ஆறுமுகம் மற்றும் 1ம் பிரதிவாதிக்கு பிறந்து குழந்தைதான் லாவண்யா என்றும் ஆகையால் தான் அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

11. ஆறுமுகத்தின் சட்டப்படியான மனைவி 1ம் பிரதிவாதி என்பது நிரூபனமாகிவிட்டாதல் மேற்கண்டவாறு பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இன்று வரை கருவம்பாளையம் விலாசத்தில் தான் Smart Card ஆறுமுகத்திற்கு உள்ளது என்றால் என் முகவரியிலும் உள்ளது. 1ம் பிரதிவாதின் குடும்ப அட்டையில் ஆறுமுகம் மற்றும் லாவண்ய பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2020 ல் லாவண்யாவிற்கு திருமணம் நடைபெற்றது என்றால் சரியல்ல. அவரது அப்பா முன்னின்று தான் திருமணம் செய்து வைத்தார் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதிதான் ஆறுமுகத்தின் சட்டப்படியான மனைவியாவார் என்றால் சரியல்ல. ஆறுமுகத்திற்கும் 1ம் பிரதிவாதிக்கும் அவரது குடும்ப வாழ்கையின் பயனாகதான் லாவண்யா பிறந்துள்ளார் என்றால் சரியல்ல.

12. ஆறுமுகம் இறக்கும்வரை 1ம் பிரதிவாதியுடன் வாழ்ந்தார் என்றால் சரியல்ல. ஆகையால்தான் ஆறுமுகத்தை அவர் மருத்துவமனையல் அவர் சேர்த்துள்ளார் என்றால் சரியல்ல. நான் ஊருக்கு சென்ற நேரத்தில் அவ்வாறு நடந்துள்ளது. ஆறுமுகம் இறக்கும் போது 1ம் பிரதிவாதி அவரது மனைவி என்ற ஸ்தானத்தில் இருந்து வந்தார் என்றால் சரியல்ல. நான் ஆறுமுகத்தின் மனைவி இல்லை என்றால் சரியல்ல. இந்து திருமணச்சட்டப்படி முதல் மனைவி

உயிருடன் இருக்கும்போது இரண்டாம் திருமணம் செய்யமுடியாது என்றால் சரிதான். நான் ஆறுமுகத்தின் சட்டப்படியான மனைவி அல்ல என்றால் சரியல்ல. நான் கேட்கும் பரிகாரம் கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடியாகவேண்டும் என்றால் சரியல்ல.

**(4 ம் பிரதிவாதி மேற்படி குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொண்டார்)**

(குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது)

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

ஒம்/- திருமதி. A.சுபஸ்ரீ,L.L.M.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.